//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:STC.No.468/2016**

**prosecution witness: PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

A4 to A7 and A10 absent.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : நடராஜன் | ஜாதி | : |
| க/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**09.01.2024**

முதல் விசாரணை:-

நான் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்று தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2014-ம் ஆண்டு இராமேஸ்வரம் கோவில் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 02.03.2014-ம் தேதி இராமேஸ்வரம் ஜெட்டியில் விசைப்படகில் இரட்டை மடியில் மீன் பிடிப்பதாக நாட்டுப்படகு மீனவர்கள் ஜெட்டியில் தகராறு செய்துகொண்டிருந்தபோது நான் மற்றுட்ம இராமசந்திரன் நொங்கு முனியாண்டி ஆகியோர் பணியில் இருநதோம். அப்போது காலை 10.00 மணிக்கு இராமேஸ்வரம் தேவர்சிலை அருகே விசைப்படகு மீனவ சங்க தலைவர் தலைமையில் சுமார் 160 பேர் சாலையில் அமர்ந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு செய்வதாக காவல்நிலையத்தில் இருந்து கிடைக்கப்பட்ட தகவலின் படி அந்த இடத்திற்கு பாதுகாப்பிற்கு சென்று 30(2) காவல்சட்டம் அமலில் இருக்கும்போது சாலை மறியல் செய்ய வேண்டாம் என எச்சரித்தோம்.

கேட்காமல் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு செய்தவர்கள் மீது காலை 12.00 மணிக்கு காவல்நிலையம் சென்று மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:-**

சம்பவ தினமான 02.03.2014-ம் தேதியன்று எது சம்பந்தமாக பாதுகாப்பு

பணிக்கு சென்றேன் என்றால் இரட்டை மடியில் மீன்பிடிப்பது சம்பந்தமாக நாட்டுப்படகு மீனவர்கள் தகராறு செய்த சம்பந்தமாக பாதுகாப்பு பணிக்கு சென்றேன். புகார் மனுவில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் 10 நபர்கள் பெயர் குறிப்பிட்டுள்ளேன். எனது முதல்விசாரணையில், போலீசார் விசாரணையிலும் சுமார் 160 பேர் தகராறு செய்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் அந்த 10 நபர்களையும் சேர்த்துதான்.

அன்றைய தினத்தில் தலைவர்களுடைய பிறந்தநாளோ, இறந்தநாளோ கிடையாது என்றால் சரிதான். அதேபோல் தேர்தல் அந்த காலகட்டத்தில் கிடையாது என்றால் சரிதான். தலைவர்கள் பிறந்தநாள், இறந்தநாள், தேர்தல் இல்லாத நாள்களில் காவல்சட்டம் அமலில் இருக்காது என்றால் சரியல்ல. அப்படி காவல்சட்டம் அமலில் இருந்தால் பொதுமக்களுக்கு தண்டோரா போட்டு பொதுஇடங்களில் அறிவிப்பு ஓட்ட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு அறிவிப்பு எதுவும் ஒட்டினீர்கள் என்றால் ஆய்வாளருக்கு தான் தெரியும். அந்த காலகட்டத்தில் நான் அங்கு தான் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு பணியில் இருந்தால் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான். புலன்விசாரணை அதிகாரி அந்த அறிவிப்பை வழக்கில் ஆவணங்களாக எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. பொதுமக்கள் கூடும் இடத்தில் அறிவிபபோ, தண்டாரோவோ போடவில்லை நான் இந்த வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கு சம்பந்தமாக என்னைத்தவிர பொதுமக்களோ, வேறு யாரோ முன்வரவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பொதுமக்களை தடுக்கவில்லை, அதிகாரிகளுக்கு இடைஞ்சலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமான தேவர்சிலை மக்கள் அதிகமாக கூடும் இடம் என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் சாட்சியாக இநத் வழக்கில் சேர்க்வில்லை என்றால் அது புலன்விசாணை அதிகாரிக்குதான் தெரியும். உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக ்புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

ஒம்/-S.இளையராஜா,<br>
மாவட்ட உரிமையியல் மற்றும்<br>
நீதித்துறை நடுவர்,<br>
இராமேஸ்வரம்